
# தமிழில் தலித் இலக்கியம்

## (ஒடுக்கப்பட்டோரின் உரிமைக் குரல்)

### தொகுதி - 4




பதிப்பாசிரியர்கள் :

முனைவர் ப. தாமரைக்கண்ணன்

முனைவர் க. சேகர், முனைவர் த. காமராஜ், முனைவர் த. மோகன்தாஸ்

முனைவர் சு. செல்வகுமாரன், முனைவர் பெ. ஜெயச்சந்திரன், முனைவர் சி. குமார்

## நூல் விவரம்

♦ **தமிழில் தலித் இலக்கியம்** (பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள் தொகுதி – 4) ♦ **பதிப்பாசிரியர்கள்** : முனைவர் ப.தாமரைக்கண்ணன், முனைவர் க. சேகர், முனைவர் த. காமராஜ், முனைவர் த. மோகன்தாஸ், முனைவர் சு. செல்வகுமாரன், முனைவர் பெ. ஜெயச்சந்திரன், முனைவர் சி. குமார் ♦ **முதற்பதிப்பு** : அக்டோபர் 2023 ♦ **பக்கங்கள்:** 484 ♦ **உரிமை** : தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி, சென்னை – 05. ♦ **வெளியீடு** : ஜோதி பதிப்பகம், நெ. 2/1067, 11 ஆவது தெரு, 2 ஆவது குறுக்குத் தெரு, முகப்பேர் மேற்கு, சென்னை – 600 037. தொடர்புக்கு : 99401 90616

**விலை : 400/–**

**ISBN: 978-81-965227-4-2 (Volume - IV)**

**நூல் கிடைக்குமிடம் : தமிழ்த்துறை**

**தொடர்புக்கு : 7695986435, 9840064700**

♦ **Thamizhil Thalith Ilakkiyam** (International Symposium Research Articles Volume - IV) ♦ **Editors** : Dr.B.Thamaraikkannan Dr. G. Sekar, Dr.D.Kamaraj, Dr.D.Mohandoss. Dr. S. Selvakumaran, Dr.P.Jeyachandiran, Dr. C.Kumar. ♦ **First Edition**: October 2023 ♦ **Pages** : 484 **Copyright**: Dept. of Tamil, Presidency College, Chennai - 05. ♦ **Published by :** Jothi Publications, No. 2/1067, 11th Street, 2nd Cross Street, Mugappair West, Chennai 600 037. Cell: 9940190616

**Price : 400/-**



# பொருளடக்கம்

பக்கம்

174. தமிழில் தலித் இலக்கியம் . . . . . . . . . . . . . . . . . . . 19
முனைவர் உ. சுப்பிரமணியன்

175. தமிழ் இலக்கியங்களில் தலித் பண்பாடு . . . . . . . . . 29
து. சுமதி

176. வரலாற்றின் சுவடுகளில் தலித் மீதான ஒடுக்கு
முறையும் அதற்கெதிரான தலித் எழுச்சியும் . . . . 33
ம. சுஜாதா

177. தலித் கலக அரசியல் – விழி. பா. இதயவேந்தன்
நந்தனார் தெரு சிறுகதையை முன்வைத்து . . . . 41
இரா. செங்கொடி

178. தமிழ்க் கவிதைகளில் தலித்தியம் . . . . . . . . . . . . . 48
முனைவர் கோ. செண்பகவள்ளி

179. அழகிய பெரியவன் சிறுகதை 'விலங்கு'
– ஓர் பார்வை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 54
முனைவர் கோ. செந்தில்செல்வி

180. தமிழ்ப் புதுக்கவிதைகளில் தலித் பெண்ணிய
உளவியல் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 61
முனைவர் கா. செல்லதுரை

181. ஹெச். ஜி. ரசூல் கவிதைகளில் தலித் இஸ்லாம் 69
முனைவர் செ. செல்வகுமார்

182. 'சோளம் என்கிற பேத்தி' புதினத்தில் மனிதநேயம் 74
முனைவர் பொன். செல்வகுமார்

183. தலித்திய வாசிப்புகளும் – நவீனத்துவக்
கோட்பாடுகளும் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 81
திருமதி. செல்வராணி ராமலிங்கம்

184. பூமிக்குள் ஓடுகிறது நதியில் விரியும் விளிம்பு நிலைப்பாடு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 87
ம. சோனியா

185. கருக்கு நாவலின் தலித் மக்களின் வாழ்வியல் . . 94
அ. டேனியல்

186. இரவு மிருகம் காட்டும் தலித் பெண்ணிய வெளிப்பாடுகள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 99
ர. தமிழ்

187. தமிழன்பனில் தலித்தியம் . . . . . . . . . . . . . . . . . . 107
முனைவர் த. தனஞ்செயன்

188. தலித் இலக்கியம் – இஸ்லாமிய பார்வையில் . . . 112
கவிஞர் தஸ்லிம்காஜா

189. திருப்பாணாழ்வாரும் திருநாளைப் போவாரும் ஒப்பீடு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 121
முனைவர் ப. தாமரைக்கண்ணன்

190. பாமாவும் தலித்திய வாழ்வியலும் . . . . . . . . . . . . . 127
ந. திருமால்

191. இமையத்தின் பெத்தவன் நெடுங்கதையில் சாதியபிடியில் பெண்கள் . . . . . . . . . . . . . . . . . . 134
ச. தேவதிருவருள்

192. சாதி எதிர்ப்பும் வறுமையும் [தாலிமேல சத்தியம் சிறுகதைத் தொகுப்பை முன்வைத்து] . . . . . . . . . 147
தெ. அ. தேன்மொழி

193. தலித் இலக்கிய மொழிநடை . . . . . . . . . . . . . . . . 155
முனைவர் தே. தேன்மொழி

194. உடலாய் மலர்ந்திருக்கும் நிலத்தின் ஆதிப்பெண் சுகிர்த ராணியின் 'தீண்டப்படாத முத்தம்' கவிதைத் தொகுப்பின் வழி . . . . . . . . . . 167
முனைவர் இ. நந்தமிழ் நங்கை

195. என் தந்தை அயோத்திதாசர்
ஏன் கொண்டாடப்பட வேண்டும் . . . . . . . . . . . . 176
வீ. நவமணி

196. தலித்திய நோக்கில் தமிழ் நாட்டார்
வழக்காற்றியல் . . . . . . . . . . . . . . . . . . . . . . 189
இரா. நவீன் குமார்

197. சமூக விழிப்புணர்வில் தலித் . . . . . . . . . . . . . . 195
க. நாகராஜன்

198. தலித் இலக்கியச் சிந்தனைகள் . . . . . . . . . . . . 199
முனைவர் வே. நிர்மலர் செல்வி

199. தலித் இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் . . 211
திருமதி இ. நிறைமதி

200. இமையம் படைப்புகளில் விளிம்புநிலை
மக்களின் வாழ்வியல் பதிவுகள் . . . . . . . . . . . 219
ஆ. நிஷாந்தி

201. மனுதர்மம் பிறப்புரிமை பறைத்தன்மை பற்றிக்
கூறுவது என்ன? . . . . . . . . . . . . . . . . . . . . 232
ம. பச்சியப்பன்

202. சாகுந்தலம் நாடகம் காட்டும் ஒடுக்கு
முறைகளும் அடித்தள மக்களின் அவலமும் . . . . 246
முனைவர் இரா. பசுபதி

203. வேரில் பழுத்த பலா புதினத்தில் குரலின் குரல் . . . 254
சு. பழனியப்பா

204. தலித் இலக்கியம் . . . . . . . . . . . . . . . . . . . . 262
அ. பாலசந்தர்

205. தலித்தியக் கவிதைகளில் கலகக்குரல் . . . . . . . . . 269
முனைவர் நா. பாலசுப்பிரமணியன்

206. பாமாவின் படைப்புகளில் தலித் பெண்களின்
பண்பாட்டுச் சிதைவும் பிற பண்பாட்டுத் தாக்கமும் 276
முனைவர் சி. பானுமதி

207. கூளமாதாரி நாவல் காட்டும் அருந்ததி
இன மக்களின் வாழ்வியல் . . . . . . . . . . . . . . . . 281
முனைவர் ந. பிரகாஷ்

208. தலித்தியம் – வலியும் வலிமையும் . . . . . . . . . . . . 289
முனைவர் ரா. பிரபா

209. கருக்கு நாவலில் தலித்தியக் கருத்தாடல்கள். . . . 300
முனைவர் ர. பிரித்தா

210. தலித்திய பார்வையில் கவிஞர் தமிழ் ஒளியின்
வீராயி காவியம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 308
முனைவர் க. பிரீதா

211. தலித் சிந்தனை ஆக்க மரபு: இமையம் . . . . . . . . . 320
முனைவர் மு. புகழ்வாணன்

212. தொல்காப்பியத்தில் தலித்தியம் . . . . . . . . . . . . . . 327
முனைவர் க. புவனேஸ்வரி

213. சு. சமுத்திரம் 'ஊருக்குள் ஒரு புரட்சி'
கதை மாந்தர் கட்டமைப்பு . . . . . . . . . . . . . . . . . 333
முனைவர் ப. புஷ்பலதா

214. கு. சின்னப்ப பாரதி சங்கம் புதினத்தில்
தலித்தியச் சிந்தனைகள் . . . . . . . . . . . . . . . . . . . 339
முனைவர் கு. புஷ்பாவதி

215. தமிழில் தலித் இலக்கியம் . . . . . . . . . . . . . . . . . 346
திருமதி கோ. பூர்ணிமா

216. தலித் மக்களின் வளர்ச்சியும் விடுதலையும் . . . . . 352
முனைவர் க. மகாராஜன்

217. சமுதாயப் பார்வையில் 'பாரதி கண்ணம்மா' . . . 358
முனைவர் இரா. மகேஸ்வரி

218. மாற்றத்தைப் பேசும் கலைஞரின் 'ஒரே இரத்தம்' 370
முனைவர் சி. ஆர். மஞ்சுளா

219. தகழி சிவசங்கரப்பிள்ளையின் தோட்டியின் மகன் புதினத்தில் துப்புரவுத் தொழிலாளர்களின் வாழ்வில் சிக்கல்கள் . . . . . . . . . . . . . . . . . . . . 378
**க. மணிகண்டன்**

220. திராவிட இயக்க வரலாற்றில் தாழ்த்தப்பட்டவர்கள் 390
**மா. மணிமாறன்**

221. இமையத்தின் புனைகதைகளில் நாட்டுப்புறப் பாடல்கள் . . . . . . . . . . . . . . . . . . . 404
**செ. மதன்**

222. தமிழில் தலித் இலக்கியம் . . . . . . . . . . . . . . . . . . . 411
**தே. மரியராணி**

223. தலித்தியமும் பௌத்தமும் . . . . . . . . . . . . . . . . . . 419
**முனைவர் செ. மார்கண்டன்**

224. வேறு கழுதைகள் விளிம்பு நிலை கதை மாந்தர்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 426
**ம. மீனாட்சி**

225. ஐக்கூ கவிதைகளில் தலித் குறித்த சொல்லாடல்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 433
**முனைவர் பா. முத்துச்சாமி**

226. அதியன் ஆதிரை கவிதைகளில் தலித் வாழ்வியலும் எதிர்ப்புணர்வும் . . . . . . . . . . . 439
**முனைவர் ஜெ. முனுசாமி**

227. விடியலை எதிர்நோக்கி தலித்துகளின் வாழ்வியல் 446
**முனைவர் இரா. மூர்த்தி**

228. தமிழில் தலித் இலக்கிய விவாதங்கள் . . . . . . . . . 454
**முனைவர் த. மோகன்தாஸ்**

229. இந்தியாவில் தலித்துகள் மீதான தாக்குதல்கள். . 470
**பா. மோகனா**

230. தலித்தியம் பேசும் திரைப்படங்கள் . . . . . . . . . . . 477
**யூ. ரசியா சுல்தானா**

174

# தமிழில் தலித் இலக்கியம்

**முனைவர் உ. சுப்பிரமணியன்**
உதவிப் பேராசிரியர் தமிழ்
தூய சவேரியார் கல்வியியல் கல்லூரி (தன்னாட்சி)
பாளையங்கோட்டை
திருநெல்வேலி 2

**அறிமுகம்**

இந்தியாவில் சாதிய படிநிலை கட்டமைப்பில் அடித்தள மக்கள் பட்டியலின மக்கள் என்று பொதுவாக அடையாளப் படுத்தப்படுவார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் நசுக்கப்பட்ட மக்கள் தாழ்த்தப்பட்டோர், தீண்டத்தகாதவர்கள் பஞ்சமர்கள் அரிஜனங்கள் பட்டியல் இனத்தவர் என்றும் தலித்துகள் அழைக்க அல்லது குறிப்பிடப்படுவதுண்டு. இந்து-வர்ண தத்துவ சமய நோக்கில் ஒடுக்கப்பட்டவர்களாகவும் தீண்டத் தகாதவர்களாகவும் பொருளாதாரத்தில் தாழ்த்தப்பட்டு அரசியல் அதிகார வலு அற்றவர்களாகவும் சமூகப் பண்பாட்டு நிலையில் மற்ற சமூகத்தால் வேறுபடுத்தப்பட்டவர்களையும், மற்றும் சமூகத்தால் ஆக்கபடுகிற ஒவ்வொரு சாதியையும் தலித் என்று அவர்களைக் குறிப்பிடப்படுகின்றனர்.

**தலித் பெயர்க்காரணம்**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (backward Classes) மற்றும் அட்டவணை சாதிகள் (Scheduled Castes) என்றும் குறிப்பிட்டது. அட்டவணை சாதியினரை மக்களை மராத்திய மொழி சொல்லில் தலித் என்று குறிப்பிடப்படுவதுண்டு. இதை ஜோதி ராவ் பூலே

என்பார் அறிமுகப்படுத்தினார். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாலே என்கிற சாதியில் வருகிற சத்திரிய ஜாதி வகுப்பைச் சேர்ந்த இவர் அழுத்தப்பட்டவர்கள் என்ற பொருளில் இச்சொல்லை உருவாக்கினார். 1920ஆம் ஆண்டு காஷ்மீரில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் பங்கெடுக்கச் சென்ற சுவாமி ஸ்ரத்தானந்தா இவர்தான் அரசியல் அரங்கில் தலித் என்னும் சொல்லை தீண்டாமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஒருங்கிணைந்த சொல்லாக உருவாக்கி அதை காங்கிரஸ் மாநாட்டிலும் அறிமுகப்படுத்தினார். தலித் என்னும் மராட்டியச் சொல்லின் மூலம் தமிழாகும். தென்னிந்திய மொழிகளுள் ஒன்றாக மராட்டிய மொழியும் ஒன்று. 'தலம'; என்பது மண்ணைக் குறிக்கும் சொல். 'தளம்' என்பது தரையினைக் குறிக்கும் சொல். இச்சொல் மராட்டி உள்ளிட்ட மொழிகளுக்குப் போகும்போது விகுதியை இழக்கும். எனவே விகுதியற்ற தலம் அல்லது தளம் ஆகிய சொற்கள் 'தல்' என்றும் 'தள்' என்றும் உச்சரிக்கப்படுகின்றன. ஆகவே மண்ணின் மைந்தர்கள் என்று பொருள்பட சுவாமி ஸ்ரத்தானந்தா 'தலித்' என்று அழைத்தார். அதன் தொடர்ச்சியாகத்தான் ஐநா மன்றத்தாலும் அடையாளப்படுத்தப்பட்ட சொல்லாக தலித் என்கிற சொல் மாறியுள்ளது.

**சிறுகதைகளில் தலித்**

புதுமைப்பித்தன் (1907 - 1948) போன்ற ஒரு பெரிய கலைஞன், தலித் பிரச்சனையை அவர் பார்வைக்கேற்ப வேறு விதமாகத்தான் கையாள்கிறார். அவர் ஏற்கனவே சுப்பிரமணிய பாரதி தன் சந்திரிகையின் கதை என்ற நாவலில் தலித் விடுதலைக்குத் தந்த ஒரு லஷியத் தீர்வைக் டெபுடி கலெக்டர் கோபாலய்யங்கார் தன் நண்பர் வீரேசலிங்கம் பந்துலு வீட்டில் வேலை செய்து வந்த மீனாட்சி மீது காதல் கொண்டு பிரம்ம சமாஜ முறைப்படி கலப்பு மணம் செய்துகொள்கிறார். கேலி செய்யும் வகையில் அக்கதையின் பின் நிகழ்வுகள் யதார்த்தத்தில் என்னவாக இருக்கும் என்று சித்தரிக்கிறார். ஊரும் நண்பர்களும் கேலிசெய்கிறர்கள். "போயும் போயும் , அவருக்கு ஒரு இடைச்சி தானா கிடைத்தாள்? என்று. படுக்கை

அறை மயக்கம் ஏதும் பிரச்சினையைக் கிளப்பாது என்றாலும், அய்யங்காரின் லஷியக் கனவுகளை நிறைவேற்ற இப்படி ஒரு கல்யாணம் செய்து கொண்டால், எழும் பிரச்சினைகள் முதலில் அவர் வீட்டுச் சமையலறையிலிருந்தே தொடங்கும் அதற்கும் முன்னால் தன்னை, மீனாட்சி "சாமி" என்றழைப்பதை முதலில் கவனிக்க வேண்டும். சமயலறையிலிருந்து வரும் கறிக்குழம்பு அடுத்த பிரச்சினை. இதையெல்லாம் அவர் சமாளித்து விடுவதாகவும் கடைசியில் மீனாட்சி கோபாலய்யங்காரை, "ஏ பாப்பான்" என்றும் அவர் மீனாட்சியை "அடி என் டைச்சிறுக்கி" என்று செல்லமாக ஒருவருக்கொருவர் அழைத்துக் கொள்வதாகவும் கதையை முடிப்பது தலித் இலக்கியத்தின் முன்னோடியாக கொள்ளலாம்.

புதிய நந்தன் என்னும் இன்னொரு கதையில் வித்தியாசமான இன்னொரு பார்வை தெரிகிறது. இது இருபதாம் நூற்றாண்டு ஆதனூரில் நிகழும் கதை. பழைய ஆதனூர் பண்ணையாரின் இந்தத் தலைமுறையின் பிரதிநிதி ராமநாதன் அவன் தன் கலெக்டர் பதவியை உதறிவிட்டு காந்தியின் விடுதலைப் போராட்டத்திலும் ஐக்கியமாகி ஹரிஜன விடுதலையிலும் நம்பிக்கை கொண்டு போராடி ஜெயிலுக்குச் சென்று சிறையிலிருந்து வெளிவந்ததும் கிராமத்துக்குத் திரும்புகிறான். அங்கு பண்ணையில் வேலை செய்யும் ஒரு பறை சாதிப் பெண்ணைப் பார்த்ததும் அவளிடம் அவனுக்கு ஆசை .கொப்பளிக்கிறது சின்ன முதலாளிக்கு தன்னிடம் ஆசை என்பதிலும் அதற்கு இடம் கொடுப்பதிலும் அவளுக்கு சந்தோஷம் தான். என்றாலும் கல்யாணம் என்ற பேச்சுக்கு இடமில்லை அவளைப் பொருத்த வரை. "அதெப்படி முடியும் சாமி" என்று மறுக்கிறாள். அவள் தந்தை கருப்பனுக்கோ இது மகா பாதகமான காரியம். ஐயர் எஜமானுக்குப் பறச்சாதிப் பொண்ணு எப்படி ஒத்துப் போகும்? புதிய நந்தன் என்னும் இன்னொரு கதையில் வித்தியாசமான இன்னொரு பார்வை தெரிகிறது.

இருபதாம் நூற்றாண்டு ஆதனூரில் நிகழும் கதை. பழைய ஆதனூர் பண்ணையாரின் இந்தத் தலைமுறையின் பிரதிநிதி

ராமநாதன் அவன் தன் கலெக்டர் பதவியை உதறிவிட்டு காந்தியின் விடுதலைப் போராட்டத்திலும் ஐக்கியமாகி ஹரிஜன விடுதலையிலும் நம்பிக்கை கொண்டு போராடி ஜெயிலுக்குச் சென்று சிறையிலிருந்து வெளிவந்ததும் கிராமத்துக்குத் திரும்புகிறான். அங்கு பண்ணையில் வேலை செய்யும் ஒரு பறை சாதிப் பெண்ணைப் பார்த்ததும் அவளிடம் அவனுக்கு ஆசை .கொப்பளிக்கிறது சின்ன முதலாளிக்கு தன்னிடம் ஆசை என்பதிலும் அதற்கு இடம் கொடுப்பதிலும் அவளுக்கு சந்தோஷம் தான். என்றாலும் கல்யாணம் என்ற பேச்சுக்கு இடமில்லை அவளைப் பொருத்த வரை. "அதெப்படி முடியும் சாமி" என்று மறுக்கிறாள். அவள் தந்தை கருப்பனுக்கோ இது மகா பாதகமான காரியம். ஐயர் எஜமானுக்கு பறச்சாதிப் பொண்ணு எப்படி ஒத்துப் போகும்? கருப்பனுக்கு ஒரு மகனும் கூட பாவாடை. அவனுக்குப் படிக்க ஆசை. ஜான் ஐயர் என்னும் வேளாள கிருத்துவர் அவனை முதலில் கிருத்துவனாக்கி, ஜான் தானியேல் என்று நாமகரணம் செய்வித்து பத்தாங் கிளாஸ் வரை படிப்பிக்கிறார். அவனுக்கு ஜான் ஐயரின் மகள் மேரி லில்லியிடம் காதல் பிறக்கிறது. இதை அறிந்த ஜான் ஐயருக்கு வந்த கோபத்தில், "பறக் கழுதை வீட்டை விட்டு கீழே இறங்கு" என்று அவனை கழுத்தைப் பிடித்து வெளியே துரத்துகிறார். அவர் வேளாளக் கிருத்துவர். அவனோ கிருத்துவனான பறையன். கோபம் கொண்ட ஜான் தேனியேல் ராமசாமிப் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து விடுகிறான். தன் தங்கை மேல் ராமநாதன் என்னும் பாப்பானுக்கு ஆசை என்று தெரிந்ததும் அவனுக்கும் ஜான் ஐயருக்கு வந்த மாதிரியே கோபம் வருகிறது. எல்லா ஜாதிக் கொடுமைகளுக்கும் காரணமே இந்த பாப்பார சாதி தானே. அதை எப்படி அவனால் தாங்கிக்கொள்ள முடியும்? அந்தப் பாப்பான் தன் தங்கையை கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறான் தான். ஆனாலும் இந்தப் பாப்பானுங்கள எப்படி பொறுத்துக்கொள்வது? கடைசியில் புதுமைப் பித்தன் கதை, "இதில் யார் புதிய நந்தன்? என்ற கேள்வியோடு முடிகிறது இந்தக் கதைகள் எல்லாம் புதுமைப் பித்தன் எழுதத்

தொடங்கிய அவரது இருபது வயதில் எழுதப்பட்டவை. இச்சிறு கதைகள் கலைவடிவில் குறைபட்டனவாகத் தோன்றலாம். ஆனால் அந்த வயதிலேயே, லட்சியத்துக்கும் நடைமுறை வாழ்க்கை உண்மைகளுக்கும் இடையேயான பெரிய வெளியையும் முரண்களையும் அவர் அறிந்திருந்து வெளிப்படுத்தியுள்ளார்.

**தலித் இதழ்கள்**

தலித்தியம் பற்றிய கருத்துக்களை வெளிபடுத்தும் விதமாக இதழ்கள் மற்றம் பத்திரிக்கைகள் வெளிவரத் தொடங்கின 1871-ல் பஞ்சமன் என்ற பெயரில் ஒர் தலித் பத்திரிகை வெளி வந்ததாகத் தெரிகிறது. 1897-ல் பறையன் என்ற பெயரிலும் ஒரு பத்திரிகை வெளிவந்ததாகக் கூறப்படுகிறது. இரட்டைமலை சீனிவாசன் என்பவர் அதன் ஆசிரியராக இருந்துள்ளார். கோடாங்கி களம் மனுஷங்கடா தலித் கிழக்கு நிறப்பிரிகை போன்ற நிறைய பத்திரிகைகள் தலித் பிரச்சினைகளை முன்வைத்து வெளிவரத் தொடங்கின விளிம்பு விடியல் போன்று தலித் எழுத்துக்களை வெளியிடுவதற்குப் புத்தக வெளியீட்டு நிறுவனங்களும் தோன்றின. தலித் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு போராடவும் பல அமைப்புகளும் தோன்றின. தலித் பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டு நாடகக் குழுக்களும் தோன்றின. தலித் மக்கள் படுகொலை பற்றி ஞானக் கூத்தன் எழுதிய கவிதை ஒன்று பரவலாக அறியப்பட்ட பேசப்பட்ட ஒன்று. அவர் பிராமணர். இந்த சம்பவத்தை மையமாகக் கொண்டு இந்திரா பார்த்த சாரதி எழுதிய குருதிப் புனல் என்ற நாவலும் தில்லி சாகித்ய அகாடமியின் பரிசு பெற்றது. அந்த நாவல் பின்னர் ஒரு நீண்ட பலத்த சர்ச்சைக்கும் உள்ளாகியது. மூன்றாவது பார்வை, தமிழ் நாவலாசிரியர் இந்திரா பார்த்த சாரதி தன் நாவலில் முன் வைத்தது இது ஆண்மையிழந்த பண்ணை முதலாளி தன் இயலாமையின் ஆத்திரத்தில் தலித் பண்ணை வேலையாட் களைத் தீக்கிரையாக்கிப் பழி தீர்த்துக்கொண்டார். பூமணி எழுதிய “பிறகு” என்ற நாவல் தான். அது தமிழ் இலக்கியத்தில், தலித் இலக்கியத்தைத் தொடங்கி வைத்த ஒரு மைல்கல்.

“தமிழ் ஹரிஜன” 1940களில் இந்தியாவில் இருந்து கிழமைதோறும் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இது காந்தி நடத்திவந்த ஹரிஜன் இதழின் தமிழ்ப் பதிப்பாகும். இவ்விதழைத் தமிழில் கொண்டு வந்தவர் சின்ன அண்ணாமலை ஆவார். இவ்விதழின் ஆசிரியராக பொ. திருகூடசுந்தரம் இருந்தார். இது அரிசனங்கள் என ஒதுக்கப்பட்டு வாழ்ந்த மக்களுக்காகக் குரல் கொடுத்த காந்தியடிகளின் கருத்துரைகளை இந்த இதழில் வெளியிடப்பட்டது இவ்விதழ் தற்சமயம் எண்ணிம வடிவில் பாதுகாக்கப்பட்டுள்ளன.

“தமிழன்” என்ற இதழ் சென்னை ராயப்பேட்டையில் 1907 சூன். 19 ஆன்று ‘ஒரு பைசா தமிழன’; என்ற பெயருடன் வார இதழாக அயோத்திதாசரால் தொடங்கப்பட்ட தமிழ் இதழாகும். ‘ஒடுக்கப்பட்டோரை ஒரு பைசாவுக்குப் பெறாதவர் என இளக்காரமாகப் பேசுவோர், ஒரு பைசாத் தமிழனை முழுமையாக அறிந்தால் ஒரு கோடி பொன் என்று பேசுவார்’ எனத் தன் இதழுக்குப் பெயர்க் காரணம் கொடுத்தார் அயோத்திதாசர். ஓராண்டுக்குப் பின் 1908 இல் வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இதழின் பெயரில் இருந்த ‘ஒரு பைசா’ நீக்கப்பட்டு, ‘தமிழன்’ என்று பெயர் மாற்றப்பட்டது. இவ்விதழ் 1933ல் நிறுத்தப்பட்டது.

பறையன் இதழ் தாழ்த்தப்பட்ட மக்களின் குரலாக ஐ.இரட்டைமலை சீனிவாசனால் 7 அக்டோபர் 1893 இல் தொடங்கப்பட்ட தமிழ் இதழாகும். இது மாதாந்தம் அப்போதைய சென்னை மாகாணத்தில் வெளிவந்தது. மாதப் பத்திரிக்கையாக தொடங்கப்பட்ட பறையன் ஒரு வருடத்தில் வார பத்திரிக்கையானது. இரட்டைமலை சீனிவாசன் தனது சுயசரிதையில் பத்திரிகை தொடங்கியதற்கான காரணத்தை இவ்வாறு கூறுகிறார். 1818-ம் வருடம் இவ்வின குடியானவர்கள் முன்னேற்றமடைய வழிவகைகளைத் தெரிவிக்கும்படி கலெக்டர்களை ரெவினியு போர்டார் கேட்டிருந்தார்கள். அது எப்படியாயிற்றென்று தெரியவில்லை. 1893-ம் வருடம் கல்வி கற்பித்து கொடுக்க தலெப்பட்டார்கள்.

வருக்ஷம் தூண்டுவாரற்று ,ருந்தார்கள் 1893-ம் வருடம் சர்க்கார் வெளியிட்ட உத்தரவை ஒரு சிலாசாசனமாய் ,வ்வினத்தார்கள் எண்ணினாலும் பலிதபடாமல் போய்விட்டது. அதற்கடுத்த படியாகத்தான் 1893-ம் வருடம் "பறையன்" என்ற பத்திரிகையை தூண்டுகோலாக வெளியிட்டேன்."

**தலித்திய நாட்டுப்புறக் கலைகளும் நாடகங்களும்**

சங்க காலத்திலிருந்தே பல கூத்து வடிவங்கள் பாமர மக்கள் மத்தியிலே பிரத்தியேகமாக வழங்கி வந்தன. தொடர்ந்து எல்லா காலங்களிலும் செவ்வியல் கலைவடிவங்களுக்கு இணையாக இன்னொரு பக்கம் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாகப் பங்கு பெறுகிற கூத்துக்களும் இருந்து வந்திருக்கின்றது. நாயக்கர் காலத்தில் பள்ளு நாடகங்கள் குளுவ நாடகங்கள் குறவஞ்சி நாடகங்கள் முதலியவை பிரசித்தமாக இருந்தன. 'அரக்கன்வதை' என்ற கதை சொல்லல் மரபும் இருந்தது. மேலும், நொண்டி நாடகங்கள் என்ற வகை மிகவும் குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். ஆட்டமும் கூத்தும் பாட்டும் இணைந்த எள்ளலும் நகைச்சுவையும் கொண்ட ஒரு கலை வடிவமாகும். இது. தலித் மக்களை - அதாவது அன்று தீண்டத்தகாதவர்கள் என்று சொல்லப்பட்ட மக்களை மையமாகவும் நாயகர்களாகவும் கொண்டு பல நாட்டுப்புறக் கதைகளும் கதைப்பாடல்களும் (டீயடடயனள) தோன்றியுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தகுந்தவை காத்தவராயன் கதை மற்றும் மதுரைவீரன் கதை ஆகியவை. காத்தவராயன், பறையர் இனத்தவன்; மதுரை வீரன் சக்கிலிய இனத்தவன். இரண்டு பேருமே தங்கள் சாதிக்கு மீறிய உயர்சாதி மற்றும் ஆளும் இனத்தைச் சேர்ந்த பெண்களைக் காதலிக்கிறார்கள். அதற்காகப் பழி வாங்கப்படுகிறார்கள். கொலைக்கும் செத்தவர் ஆவிக்கும் பயந்தவர்களால் இவர்கள் சிறு தெய்வங்களாகவும் மாற்றப்பட்டனர். நந்தன் கதை, திருநாளைப் போவார் கதையாகப் பெரிய புராணத்தில் இடம் பெறுகிறது. இந்தக் கதையினைத் தாழ்த்தப்பட்ட இனத்தவர் மற்றும் பண்ணை- அடிமை விவசாயிகள் சார்பாக இருந்து கதா காலட்சேபமுறையில் கலை வடிவமாக ஆக்கியவர், 19-ஆம்

நூற்றாண்டைச் சேர்ந்த கோபாலகிருஷ்ண பாரதியார். கதையின் பெயர் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை. இன்று, நவீனத்துவத்தின் பின்னணியில் தலித்து நாடகங்கள் பல எழுதப்பட்டும் இயக்கப்பட்டும் வருகின்றன.

முதல் தலித் இதழ் சூரியோதயம் தொடங்கப்பட்டது 1869ம் ஆண்டு. உதய சூரியன் இதழ் வெளிவந்தது 1943ம் ஆண்டில். இந்த இரண்டோடும் சேர்த்து பஞ்சமன் சுகிர்தவசனி இந்துமத சீர்திருத்தி ஆன்றோர் மித்திரன் மஹாவிகடதூதன் பறையன் திராவிடப் பாண்டியன் இணல்லற ஒழுக்கம் திராவிடப் பாண்டியன் பூலோகவியாஸன் ஒருபைசாத் தமிழன் திராவிட கோகிலம் மதுவிலக்கு தூதன் ஆல்காட் கிண்டர்கார்டன் ரிவிஷீ விநோதபாஷிதன் வழிகாட்டுவோன் என்று மொத்தம் 42 தலித் இதழ்கள் குறித்த அறிமுகத்தை அளிக்கிறது ஜெ. பாலசுப்பிரமணியம் எழுதிய சூரியோதயம் முதல் உதயசூரியன் வரை என்னும் நூல். காலச்சுவடு

**இலக்கியங்களில் தலித்துகள்**

பழைய இலக்கியங்களில் தலித்துகள் தொல்காப்பியம் உள்ளிட்ட சங்கநூல்கள் உழைக்கும் மக்களைத் தாழ்த்தப் பட்டவர்களாகச் சித்திரிக்கின்றன. இழிசினன் (புறநானூறு 82,287, 289) இழிபிறப்பாளன் புலையன் (புறம் 360) புலைத்தி (புறம் 259. 311) முதலிய சொற்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. துடியெனும் இசைக் கருவியை "ஒல்" என்னும் ஓசையுடன் இழிந்த பிறப்பாளன் என்று கருதப்படும் பறை கொட்டுபவன் இசைக்கிறவன் 'இழி பிறப்பாளன் கருங்கை சிவப்ப வலி துரந்து சிலைக்கும் வன்கட் கடுந்துடி.' அவனுடைய கைகளைக் 'கருங்கை' என்று அடைகொடுத்துச் சொல்லுவதையும், கைகள் 'சிவப்ப' என்று சிறப்பித்துச் சொல்லப் படுவதன் காரணத்தையும், 'துடி' என்ற இசைக் கருவிக்குக் கொடுக்கின்ற அடைமொழிக்குரிய அவசியத்தையும் சொல்லவேண்டும். புறநானூறு 170வது பாடல் சித்திரிக்கின்றது. இவ்வரியின் மூலம் தலித்திய வாழ்க்கையைக் காட்டுகிறது. பெரியபுராணத்தில் திருநீல கண்ட யாழ்ப்பாணர்,

திண்ணன் திருநாளைப் போவார் எனும் நந்தன் ஆகிய மாந்தர்கள் நாயன்மார்களாக வருகிறார்கள். இவர்களின் சித்திரங்கள் வரலாற்றுப் பின்புலங்களோடும் காரண காரியங்களோடும் ஆராயப்படுகின்ற போது தலித்திய தன்மை புலப்படும். இப்படிப் பழைய இலக்கியங்கள் சிலவற்றில் 'இழிசினர்' அல்லது ஒடுக்கப்பட்டவர்களாகவே வலம் வருகின்றனர். ஆனால் மிகவும் குறைவாகவே இடம் பெறுகின்றனர். பல இலக்கிய வகைமைகளில் இவர்கள் இடம் பெறுவதே இல்லை. பிற்காலத்திய பள்ளு இலக்கியங்களில் தான் முதன் முறையாகத் தலித்துகள் (பள்ளர்) தலைமை இடம் பெறுகின்றனர். பள்ளு இலக்கியம் பற்றித் திறனாய்வாளர் கோ. கேசவன் கூறும் கருத்து தலித்தியத் திறனாய்வுக்கே முன்னோடியாக அமைகிறது.

**தலித் இலக்கியங்கள்**

இன்றைய இலக்கியம் என்பதைப் பொறுத்த அளவில், டி. செல்வராஜ் எழுதிய 'மலரும் சருகும்' (1970) என்ற நாவல்தான் முதல் தலித் நாவல் என்று சொல்லப்பட வேண்டும். நெல்லை வட்டாரத்தைப் பின்புலமாகக் கொண்ட இந்த நாவல் தலித்துக்களை ஒரே தளத்தில் - ஒரே பரிமாணத்தில் - அல்லாமல், பல தளங்களில் பல பரிமாணங்களில் காட்டுகின்றது. கூலி விவசாயிகளாகவும் சிறு நிலவுடைமைக் கிழார்களாகவும் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட பாமர மக்கள் எப்படித் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் தங்கள் நிலங்களையும் தொழில்களையும் காப்பாற்றிக் கொள்ளவும் துன்பப்படுகிறார்கள் என்பதை இந்த நாவல் எதார்த்தமான உத்தியில் சித்திரிக்கின்றது. தன்னுடைய மக்களின் பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு அவர்களுக்காக உழைக்கிறான். இந்நாவலில் வருகிற ஒவ்வொரு பாத்திரமும், தலித்துகளின் மாறிவரும் வாழ்நிலைகளையும் உணர்வுகளையும் நடப்பியல் நிலையில் சிறப்பாக வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது. அடுத்து, டேனியல் பூமணி - என்ற இருவரும் தலித்து இலக்கியத்தின் முன்னோடிகள் ஆனால்

இவர்கள் சமூக மாற்றம் வேண்டுகிற புரட்சிகர மனப்பான்மை கொண்டவர்கள். ஸ்ரீதர கணேசன் என்பவரின் உப்பு வயல் என்ற நாவலில் இந்தப் போக்கு முதன்மையாக உள்ளது. ஒரு தலித் பெண்ணின் வாழ்க்கை அனுபவங்களைச் சித்திரிக்கின்றது இந்த நாவல். அவள் ஒரு பெண்; ஒரு தலித்; உப்பளத் தொழிலாளி என்ற மூன்றும் ஒன்றாக இயங்குகிற ஒரு வடிவமாக அவள் விளங்குகிறாள். உண்மையுணர்வோடும் போராட்ட உணர்வோடும் கூடிய இந்த நாவல் தலித் நாவல் என்ற வகையில் புதியதொரு கோணத்தைச் சேர்ந்ததாகும். ராஜ் கவுதமன் பாமா இமையம் சோ. தருமன் விழி.பா. இதய வேந்தன் அழகிய பெரியவன் ஆகியோரும் மாற்கு சி. இராசநாயகம் பெருமாள் முருகன் சோலை சுந்தரப் பெருமாள் பஞ்சு முதலியோரும் தலித் வாழ்க்கைகளை மையமாகக் கொண்டு நல்ல பல புனைகதைகள் எழுதியுள்ளனர்.

**தலித்திய கவிதைகள்**

சிறுகதைகள் புதினங்களன்றியும் தலித் சிந்தனையாளர்கள் பலர் கவிதைகளிலும் இவர்களிடமிருந்து மிகச்சிறந்த கவிதைகள் வந்துள்ளன. மதிவண்ணன் என். டி. ராஜ்குமார் உஞ்சைராஜன் பாமரன் இராச. முருகுபாண்டியன் பிரதிபா ஜெயச்சந்திரன், பாரதி வசந்தன் முதலிய பெயர்கள் இத்தகைய கவிஞர்களின் அணிக்கு அழகு சேர்க்கின்றன.



**ஜோதி பதிப்பகம்**

நெ. 2/1067, 11 ஆவது தெரு, 2 ஆவது குறுக்குத் தெரு
முகப்பேர் மேற்கு, சென்னை - 600 037.
கைபேசி : 9940190616

ISBN 978-81-965227-4-2
9788196522742